## கரைத்துறைப்பற்று பிரதேசசபை
## முல்லைத்தீவு மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 02 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 10 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 20 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய கரைத்துறைப்பற்று பிரதேசசபை 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அ. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானம் செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | வருமானங்கள் | | செலவுகள் | | பொறுப்புக்கள் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 04 | 167,682 | - | | 01 | 4,790 | | |
| அதிகரித்துக் கூறல்கள் | | - | 01 | 220,451 | 02 | 122,477 | | |
| வகைப்படுத்தல் தவறு | | | | | 01 | 158,054 | 01 | 273,465 |

ஆ. சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 14 உழவு இயந்திரங்களதும் 8 பவுசர்களதும் பெறுமதி மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

**கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 35,941,771 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 13,516,199 விளைந்திருப்பதுடன் ஒப்பிடும் போது நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாடு செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 31,904,949 விளைந்திருந்தது.

## 2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 782,647 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 6,842,139 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2012 | | |
|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 187 | 207 | - |
| குத்தகை வாடகைகள் | 9,045 | 12,116 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 555 | 1,311 | - |
| வேறு வருமானங்கள் | 21,392 | 18,327 | 178 |
| | 31,179 | 31,961 | 178 |

2.3.2 வீதி வெளிச்சம்

1999ம் ஆண்டிலிருந்து மின்சார செயற்பாடுகள் அனைத்தும் இலங்கை மின்சார சபையிடம் கையளிக்கப்பட்டபோதும் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வீதி மின் விளக்கு பொருத்துதல் சம்பந்தமாக இலங்கை மின்சார சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளாமல் சபையின் நிதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 273,465 சபையினால் மீளளிப்புச் செய்யப்படவில்லை.

**2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம்.**

மீளாய்வண்டில் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணங்களும் குற்றப் பணங்களும் ஆகிய ரூபா 4,664,333 கணக்கிலிடப்படவில்லை.

**2.3.4 முத்திரைத் தீர்வைக் கட்டணம்.**

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் ரூபா 2,468,180 முத்திரைத் தீர்வைக் கட்டண அறவீடு தொடர்பாக எவ்வித கணக்குப் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்**

**2.4.1 பயன்படுத்தப்படாத பௌதீகச் சொத்துக்கள்**

மீளாய்வாண்டில் 3 உழவு இயந்திரப் பெட்டிகளும் 2 பவுசர்களும் 1 மிதிவண்டியும் பழுதடைந்த நிலையில் பயன்பாடின்றி காணப்பட்டது.

**2.4.2 கணிப்பீட்டுச் சபை அறிக்கை**

(அ) கணிப்பீட்டுச் சபை அறிக்கையின் பிரகாரம் பாவனைக்குதவாத 8 வகையான 14 பொருள்கள் அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) புத்தக மீதியுடன் பௌதீக மீதியை ஒப்பீடு செய்தபோது 3 வகையான 9 பொருட்கள் குறைவாக காணப்பட்டது.

### 2.4.3 பதவியினர் கடன் நிலுவை

சபையிலிருந்து இடமாற்றத்தில் சென்ற 07 அலுவலர்களிடமிருந்து கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக அறவீடு செய்ய வேண்டிய கடன் நிலுவை ரூபா 564,048 அறவீடு செய்வதற்கு சபை ஆக்க பூர்வமான நடவடிக்கை எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|---|
| (அ) | 1988ம் ஆண்டின் நிதிநிர்வாக ஒழுங்கு விதி | |
| (i) | அத்தியாயம் III பிரிவு 12(1) | ஆதனவரி சம்பந்தமாக வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தாமை. |
| (ii) | அத்தியாயம் III பிரிவு 29 | மொத்த சேகரிப்புகள் நாள்தோறும் வங்கியில் இடப்படாமை |
| (iii) | அத்தியாயம் III பிரிவு 59, 60 | வியாபார வரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படவில்லை |
| (iv) | அத்தியாயம் III பிரிவு 65 | அரசிறை எழுதுநர் வியாபார உரிமம் சம்பந்தமாக அரசிறை எழுதுநர் தவறுநர் நிரல் தயாரித்து செயலாளரிடம் ஒப்படைக்கவில்லை. |
| (v) | அத்தியாயம் III பிரிவு 66 | செயலாளர் 1987 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் பின் 150(4) ம் பிரிவின் கீழ் சந்தைக் கடை, இறைச்சிக்கடை நிலுவை ரூபா 178,083. அறவிட நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (vi) | அத்தியாயம் IV பிரிவு 97 | நிகழ்ச்சி குறியீடுகள் செலவின விடயங்கள் என்பன வாக்குப் பணங்களை கொடுப்பனவு செய்வதற்கிலும் எல்லா உறுதிச்சீட்டுகளிலும் வரவு செலவு திட்டத்தில் தோற்றமளிக்கும் அதே முறையில் காட்டப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (vii) | அத்தியாயம் V பிரிவு 140 | ரூபா 635,421 பெறுமதியான முற்பணம் உரிய திகதியில் முற்பணம் செலுத்தத் தவறும் போது செயலாளர் நடவடிக்கை எடுக்காமை |
| (viii) | 2002 இன் 10ம் இலக்க பெறுமதி சேர் வரி | ஏதாவது மாதத்தினுள் அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரியை அடுத்த மாதத்தின் 15ம் திகதிக்கு முன்னர் ஆணையாளர் உள்;ராட்சி இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் 2010 – 2012 வரையான காலங்களில் சபையால் அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 2,886,578 சபையின் நானாவித வைப்பில் உள்ளடக் கப்பட்டுள்ளது. |
| (ix) | 2009ம்ஆண்டின் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்பும் அதிகார சட்டம் | 2010-2012ம் ஆண்டு காலத்தில் அறவிடப்பட்ட தேசத்தை கட்டியெழுப்பும்வரி ரூபா 532,124 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாது சபையின் வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

## 2.6 ஒப்பந்த நிர்வாகம்

### 2.6.1 செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் காலதாமதம்

சபையினால் நடைமுறையாண்டில் செயற்படுத்தவென பாதீடு செய்யப்பட்ட ரூபா 1,860,000 பெறுமதியான தலைமை அலுவலக மேற்தள கட்டிட வேலைத்திட்டங்கள் செயற்படுத்துவதில் காலதாமதம் காணப்பட்டது இது தொடர்பாக சில்லறைக்கடனாளிகள் கணக்கில் ரூபா 2,960,000 கணக்கிலிடப்பட்டது.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

**பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.**

i. வருமானசேகரிப்பு
ii. நிலையான சொத்துக்கள்
iii. கணக்கீடு
iv. வாகனங்களின் பயன்பாடு
v. நானாவித வைப்புக்கள்
vi. வரவு செலவுத்திட்டம்.